REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 112

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
ரு'மிற்சக்மெழுமையாவில் இதழ் கிடையாது.

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை: ஐப்பசி 6வ வியாழன் (22—10—53) ★ ★ ★ வெளியூர்: ஐப்பசி 7வ வெள்ளி (23—10—53)

"அமைச்சர்கள் தொலையட்டுமே"

"'காட்டுமிராண்டித்தனம்' என்பதாக ரொம்பப் புத்திசாலித்தனமாக பண்டிதர் சொல்லிவிட்டார்!"

—(:)—

அமைச்சர்கள் ஆணைக்குட்படாத சுதந்திர 'போலீஸ் துறை' தேவை

காங்கிரஸ் பெற்ற சுயராஜ்யம் வெள்ளையர்களின் தற்கொலையால் சாத்தியமாயிற்று!

எச்சில் துப்பி சண்டைக்கிழுக்கும் இளைஞர் காங்கிரஸ்

திருநெல்வேலி, அக். 22 -

"மதுரைக்கு வந்த பண்டித நேரு, கருப்புக்கொடி காட்டியதை, 'காட்டுமிராண்டிகள் செயல்,' என்றார். இவ்வாறு கூறுவதால், காட்டு மனிதர்கள் மனம் கூட புண்படலாம். தமிழர்கள், இம்மாதிரி செயல்களைச் செய்வதற்குக் காரணம், பண்டித நேருவின் செயல்களே! தமிழர்கள், காட்டுமிராண்டித் தனத்தைக் கைக்கொள்ளக் கூடாது. காங்கிரஸ்காரர்கள், முன்னாளில், கருப்புக் கொடி பிடித்தபோது, அது, காட்டுமிராண்டித்தனமாகத் தோன்றவில்லை, பண்டித நேருவுக்கு! இப்போது, அச்செயல், காட்டுமிராண்டித்தனமாகத் தோன்றுகிறது. ரொம்ப புத்திசாலித்தனமாக அவர் சொல்லிவிட்டார்."

"நாம் அடைந்துள்ள சுதந்திரத்தை நாமாக அடைந்திருந்தால், பாண்டிச்சேரியிலும், கோவாவிலுமுள்ள அன்னியர்கள், தாங்களாகவே ஓடிப்போயிருப்பார்கள். நாம், நம் நாட்டுச் சுதந்திரத்தை, ஆங்கிலேயர்கள், நம் நாட்டைவிட்டு ஓடியதின் மூலமாக பெற்றிருக்கிறோம். அதனால்தான், பாண்டிச்சேரி, கோவாவில் ஆட்சிசெய்யும் அன்னியர்கள் அவ்விடங்களை விட்டுப் போகாதிருக்கின்றனர்."

"நேரு, மதுரைக்கு வந்திருந்தபோது, எவ்வளவு போலீசார் காவல் தெரியுமா? போலீஸ்காரர்கள் தயவில்லாமல் அமைச்சர்கள் தற்போது வெளியே போக முடியாது; பேச முடியாது. நாங்கள் அமைச்சர்களாக இருந்தபோது, போலீஸ்காரர்களை, இப்படி காவலுக்கு வைத்துக்கொண்டதில்லை. அமைச்சர்களுக்குப் போலீஸ் காவல் ஏன்? பொதுமக்கள் அமைச்சர்களைக் கொன்றுவிடுவார்களென்றா? பொதுமக்களுக்குப் பிடிக்காத அமைச்சர்கள், தொலைந்தால் தொலையட்டுமே!"

"இந்தியாவில், அந்தந்தப் பகுதியிலுள்ளவர்கள், அவரவர்கள் மொழியைப் படிக்கட்டும் என்றிருக்க வேண்டும். எந்த மொழியையும் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தக் கூடாது."

—இவ்வாறு, நெல்லை இந்துக் கல்லூரி மண்டபத்தில், அக். 18-ந் தேதி மாலை, சென்னை மாநில 14-வது தமிழர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய பி. டி. ராசன் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், கூறியதாவது:—

ஒத்துழைப்பு

"நாட்டில் பல தமிழ்ச் சங்கங்கள் இருக்கின்றன; ஒவ்வொரு ஊரிலும் ஒன்று இருக்கிறது; அவைகள், தமிழர் வாழ்க்கைக்கு உகந்தபடி நடப்பதில்லை. மதுரையிலுள்ள தமிழ்ச் சங்கமும், மற்ற ஊர்களிலுள்ள எல்லாத் தமிழ்ச்சங்கங்களும் தொடர்பு கொண்டு ஒன்றுபட்டுத் தமிழர் முன்னேற்றத்திற்கு வேலை செய்யவேண்டும்."

வடவர் செயல்!

"அரசியலில் தனித் தமிழ் நாடு வேண்டுமென்கிறவர்கள்கூட, வடநாட்டார் செயல்களைப் பின்பற்றுகிறார்கள். கருப்புக் கொடி காட்டுவது, ரயில் செயின்களை இழுத்து ரயிலை நிறுத்துவது, அரசாங்கக் கட்டிடங்களைப் பொசுக்குவது ஆகிய செயல்களெல்லாம் வடநாட்டாரின் செயல்கள். அவைகள் வடநாட்டிலிருந்தே வந்தன. இச்செயல்கள் தமிழருக்குரிய செயல்களல்ல."

ஒழுக்கம் தேவை

"அரசாங்கத்தில் அதிகாரியாக இருக்க சர்வகலாசாலைப் பட்டம் பெற்றால் போதாது. அதிகாரியாக இருப்பவருக்கு, யோக்கியதை வேண்டும்; லஞ்சம் வாங்காதவர்களாக இருக்க வேண்டும்; மக்கள் நலம் கருதுபவர்களாக இருக்க வேண்டும். இவைகள் அரசாங்கத்தில் இல்லையானால், நாம் சுதந்திரம் பெற்றதனால் யாதொரு பயனும் இருக்கப்போவதில்லை."

நா காக்க!

"சுதந்திரம் பெற்ற பிறகு, பேசும்போது, அடக்கமாகப் பேசவேண்டும்; மனம் போனபடி பேசி காரியங்களைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது."

இ. கா. வம்பு

நேரு வந்துபோனபின் மதுரையில் நடந்ததென்ன? திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிராக இளைஞர் காங்கிரசு புறப்பட்டிருக்கிறது. தி. மு. கழகத்தினர், கருப்புக் கொடியைக் காண்பித்தால், காட்டிவிட்டுப் போகட்டுமே! அதற்கு விடாததால், பின்னர் சச்சரவு ஏற்பட்டது; ஒருவர் வெட்டப்பட்டு செத்தார்; அதற்கு, ஊர்வலம்; மரணப் பேருரைகள் நடத்தினர். இப்படி எதிர்ப்புச் செய்துதான் வம்புக்கு இழுக்கிறார்கள்."

அவருக்கே தெரியும்!

"தி. மு. கழகத்தினர்மீது, கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நேரு கூறினாராம். நல்லவேளையாக சி. இராஜகோபாலாச்சாரி நேருவிடமிருந்து பாடம் கற்கவில்லை. இராஜகோபாலாச்சாரி நேருவைக் கேட்டு தடியடி பிரயோகம் செய்திருந்தால், அவர் எங்கே இருந்திருப்பார் என்பது தெரியாது. நல்லவேளையாக அவர் நேருவைக் கேட்டு நடக்கவில்லை."

சுதந்திரம்

'அதிகாரிகளும், போலீசாரும், அமைச்சர்கள் அதிகாரத்தினுள் இருக்கக் கூடாது; இருந்தால், அதிகாரிகளும் போலீசாரும் பாரபட்சமாகவே நடப்பார்கள்."

கூடாது!

"தூத்துக்குடியில், ஒரு சிலர், சில பெண்களைக் கேவலப்படுத்தினார்களாம். எந்தப் பெண்களையும் கேவலப்படுத்துவது கேவலமான செயல். தமிழர்கள் ஒழுங்காக நடக்க வேண்டும்; தேசத்துக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யவேண்டும்; தவறாக நடப்பது கூடாது."

ஒற்றுமை

"மதம், மொழி, இனம் இவைகளினால் ஒற்றுமை ஏற்படுவதில்லை. ஒற்றுமை எப்பொழுது ஏற்படுமென்றால், 'பொது அபாயம்' 'சமுதாய நலன்' ஆகியவை வரும் போது ஏற்படும்."

இரண்டாவது முசோலினியைப் பெற இத்தாலியின் பிரசவ வேதனை!

டிரிஸ்டியில் நுழைய ரோம் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

கிளர்ச்சிக்காரர்களோடு ஆயுதம் தாங்கிப் போலீஸ் கைகலப்பு

டிரீஸ்டி 'ஏ' பகுதியில், இத்தாலியத் துருப்புகள் பிரவேசித்தாக வேண்டும் என்று, டிட்டோவின் போக்கிற்கு எதிராக, இத்தாலிய மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ரஷ்யத் தூதுவர் காரியாலயத்துக்கு முன்பாகக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களை அப்புறப்படுத்துவதற்காக ஆயுதம் தாங்கிய போலீஸ் படையினர் தடியடி கொடுத்தனர்.

அமெரிக்கா, பிரிட்டன், யூகோ நாடுகளின் தூதுவர் காரியாலயங்களை, முன்னேற்பாடாக பலத்த இராணுவ போலீஸ் படையினர் பாதுகாத்து வருகின்றனர்.

இன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டம், நாளை நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள பெரும் கிளர்ச்சிக்கு, சிறு ஒத்திகையாகும் என்று போலீஸ் வட்டாரம் கருதுகிறது.

'புதிய பாசிஸ்ட்' என்று அழைக்கப்படும் கட்சியைச் சார்ந்த 300 மாணவர்கள் சோவியத் தூதுவர் அலுவலகத்தை முற்றுகை இட்டு

(3-ம் பக்கம் பார்க்க)

போர்ச்சுகலின் புராதன மொழி

மலாக்கா, அக். 21—

இரு போர்ச்சுகல் யுவதிகள், போர்ச்சுகலிலிருந்து இங்கு வந்துள்ளனர். இவர்கள், மலாக்கா போர்த்துகேசிய மொழியை நன்றாகப் பேசுகின்றனர். நான்கு நூற்றாண்டுகளுக்குப் பின்பும் இம்மொழி பேசப்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் மலாக்கா போர்ச்சுகலைச் சேர்ந்ததாயிருந்தது.

போலீசாரால் தேடப்பட்ட மதுரை இளைஞர் காங்கிரசார்

நால்வர் கோர்ட்டில் சரண்!

மதுரை, அக். 20—

அண்மையில் மதுரைக்கு வந்த இந்தியத் துணைக் கண்டத்தின் முதலமைச்சர் நேரு பண்டிதருக்கு, மதுரை நகர் தி. மு. கழகத்தார் கருப்புக் கொடி காட்டி எதிர்ப்பைக் காட்டிக் கொண்டதை யொட்டி, காங்கிரசார் நடத்திய சில அசம்பாவித நிகழ்ச்சிகள் காரணமாக, நகர இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த ஆர். வி. தேவபால், எஸ். [illegible] வீரப்பா உள்பட 30 பேர்மீது தொடரப்பட்ட வழக்கு, இன்று நகர முதல் மாஜிஸ்திரேட் பி. எஸ். தங்கமணி முன்பு எடுத்துக்கொள்ளப் பட்டது.

போலீசாரால் தேடப்பட்டு வந்த நான்கு காங்கிரஸ்காரர்கள், இன்று கோர்ட்டில் சரணடைந்தனர்.

விசாரணை இம்மாதம் 29-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஐவர் சிறையில்!

இன்று

52-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் [illegible] அண்ணாதுரை

சென்னை : 22-10-1953 வியாழன்

'தொட்டுக் கொண்டு, தின்பேன்!'

சாலை ஓரத்திலே ஒரு [illegible], உட்கார்ந்துகொண்டு, இயற்கையின் [illegible] இருந்த மீன [illegible] முயற்சித்துக் கொண்டிருந்தான். [illegible] அவனது வாயும் அசை போட்டுக்கொண்டு இருந்தது.

இந்த அநாகரீகத்தை, காட்டுமிராண்டித்தனத்தைக் கண்ணுற்றார் ஒரு வழிப்போக்கர் மனம் புண்பட்டார். அறிவுரை கூற [illegible]. 'தம்பி! இத்தருணத்திலா தின்பது?' என்று [illegible].

தம்பி, ஒரு [illegible]. [illegible] சிறப்புடையவன், அவனுடைய [illegible], பெரியவரின் சொல் [illegible], [illegible]! [illegible] நிறக்குறுமன் பதில் கூறினான்! [illegible]!

[illegible] அறிவுரையும், [illegible] கண்டும் [illegible], அவன் நாவில் [illegible] பார்த்தவர்கள் [illegible].

'தொட்டுக்கொண்டு தின்பேன்! நீ யார் என்னைக் கேட்க?' என்றான் அந்த [illegible] இளைஞன்!

வழிப்போக்கர், தம் வழியே சென்றார், இளைஞனின் பேதமையையும் [illegible] எண்ணி [illegible]!

இது கதை! [illegible]! அதிகாரபீடத்தில் அமர்ந்திருப்போரின் [illegible] உவமை!

இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் ஜவகர்லால் நேரு சிறந்த மனிதர், பெரிய குடும்பத்தில் செம்மல், ஆங்கிலப் புலமை மிக்கவர், மக்களாட்சி [illegible] பிறந்த அகத்தில் இளமையைக் கழித்தவர், [illegible] முழ்கித் திளைத்தவர், [illegible] உரிமைக்காக [illegible] ஒரு காலத்தில் பெரும்போர் தொடுத்துப் பயிற்சி பெற்றுள்ளவர், [illegible] உரிமைக் காப்புச் சங்கத்தின் [illegible], காந்திய வழி வந்தவர், உரிமைப் போராட்டத்தின் உள்ளும் புறமும் [illegible] கற்றிருப்பவர். ஆங்கிலேயர் இழிமொழி கேட்டு தம்முள்ளம் கொதிப்பேறப்பெற்றவர், அவர் அடக்குமுறை கண்டு அறப்போர் காளையாக இருந்து அனுபவம் பெற்றவர், தூய உள்ளத்தவர், புனித சேவையினர், இத்தகைய அருங்குணங்கொண்டவர், தமது முன்னாள் புகழ்மிக்க வாழ்க்கை வரலாற்றுக்கு [illegible] தேசிய [illegible], [illegible] பொய்யாது, மக்கள் உரிமை வேட்கைக் [illegible] 'நான்சென்ஸ்' என்று, [illegible] இருக்கிறோமே, நல்லறமாகாதே இது. [illegible], [illegible] பயன் [illegible]. [illegible] செய்யுமோ, [illegible] பாக்கிக்குமே—என்று, நமது தி. மு. கழகம் எண்ணிற்று.

பெரிய பதவி, பொறுப்பு அதற்கேற்ப அதிகம். 'நாசூக்க வேண்டும்; [illegible], [illegible] பட்டு'—கூடாத [illegible] போக்கு—இட்லரா, முசோலினியா, [illegible], [illegible]; [illegible] பூஜைக்குரியவர் ஆயிற்றே; 'ஆசியாவின் ஒளி' அவர் எனப் புகழ்ந்து கூறக் கேட்டிருக்கிறோமே; 'மனிதருள் மாணிக்கம்' என்று சில பலர் தோத்திரப்பதை செவிமடுத்து இருக்கிறோமே; அத்தலைவர் 'நான்சென்ஸ்' என்று நச்சுச் சொல் வீசி, [illegible] புகழுக்குக் களங்கம் தேடிக்கொள்ள விட்டு விடுவதா—என்று, நமது தி. மு. கழகம் சிந்தித்தது.

நாட்டு நிலைமை அவர் அறிய 'நாடு' போன்று இருக்கும் ஏடுகளோ, எத்தரும் பித்தரும் நடத்துவதாயிற்றே; உடன் இருக்கும் [illegible], 'நாடு செல்வச் சிறப்பில் சிறந்து இருக்கிறது! உங்கள் புகழ் [illegible] எரிகிறது!' என்று இச்சகம் பேசும் பரம்பரை இழிகுணம் படைத்தவர்களாயிற்றே, [illegible] உள்ள [illegible] ஏவலாளிகளோ, 'நுமது [illegible] தினம் மக்கள் பஜிப்பதை எம் செவியாரப் பருகுகிறோம்! [illegible] மகிழ்வீர்!' என்று [illegible] பாடும் [illegible]; உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்ற இலக்கிய ஓர்ந்து, உற்ற உயிர்த்துணை என்று நம்பி, நாட்டு மக்களின் எழுச்சிமிக்க இதயக் [illegible] அனைத்தையும் 'நான்சென்ஸ்' என்று தீச்சொல் [illegible] அடக்க முயன்று, [illegible] தேடிக் கொள்ளு [illegible] இது அறியாமையின் விளைவு, அறிவிப்போம் நாட்டின் உண்மை நிலைமை—என்று, நமது தி. மு. [illegible] வந்தது.

[illegible] கருத்தும், குறைபாடும் இன்னதென்று [illegible], எடுத்ததற்கெல்லாம் 'நான்சென்ஸ்' [illegible] இருப்பதினால், அது கேட்டு மக்கள் [illegible], அதுத் தீப்பிழம்பாக மாறு முன் தம் போக்கை மாற்றிக் கொள்ளுவார், பெரு நெறியைப் பின்பற்ற முயலுவார், அறிவிப்போம், எல்லா ஆட்சி முறைப்படியும், முடங்கல் விடுப்போம் என்று தி. மு. கழகம், நிலைமையை விளக்கிக் கூறியது.

அவரெங்கே, சாதாரண மக்களாகிய நாம் எங்கே! அவரோ, 'ஆசியாவின் ஜோதி'! நமோ, குடத்துக்குள்ளிட்ட விளக்கு!

அதிகார தேவதையின் சாகச உரையை விடவா, நம்முடைய அறிவுரை, அவருடைய உள்ளத்தைத் தொட சக்திபெற்றிருக்கிறது?

இடைக்காலத்தில் பலப்பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்துவிட்டன. ஜூலை பதினைந்து, ஆச்சாரியார் அடக்குமுறை. ஐயாயிரம் காளைகள் வெஞ்சிறையில்! வெளியே வந்தனர் பலர்; இன்னும் உள்ளனர் கம்பிகளுக்குப் பின்னாலே சிலர்.

ஐம்பெரும் தலைவர்கள் சிறையில்! நண்பர் கருணாநிதி சிறையில்! தூத்துக்குடி முன்னணி வீரர்கள் சிறையில்,! தூத்துக்குடி வழக்கு வேறு உருவத்தில் இன்னமும் முடிவு காணமல் இருக்கிறது!

'நான்சென்ஸ்' என்ற காட்டுமிராண்டிச் சொல், அவ்வளவு பெரிய மனிதருக்கு மிக மிகச் சாதாரண சொல்லாக இருக்கிறது! அச்சொல், நமக்கோ, நெஞ்சை அரிக்கும் கொடு நஞ்சாக இருக்கிறது!

அப்பாக்கிக்குச் சில தோட்டா'தான் செலவு; நமக்கோ ஆறு உயிர்கள் நஷ்டம்!

ஆளுவோருக்கும் - ஆளப்படுவோருக்கும் உள்ள, நடைமுறை அகராதியே வெவ்வேறு!

அன்றிருந்த நேரு, மறைந்தே போனார்! இன்று இருப்பவரோ, பாராளும் பரிசு பெற்றிருக்கும் பண்பிழந்த பதட்டக்காரர்!

சென்னைக்கு வந்தார், கருப்புக் கொடி கண்டார்; கண்ணும் சிவந்தது - கருத்தும் குழம்பியது!

'காட்டுமிராண்டி' என்றார், நம்மைப் பார்த்து! 'இல்லை —இல்லை—அவர்களிலும் இழிவான மக்கள் இவர்கள் என்று இயம்பி மகிழ்ந்தார்—இல்லை—தம் உள்ளத்தில் மூண்ட சினத்துக்கு, இவ்வாறு கூறி மருந்திட்டார்!

உலக வரலாறு கற்றவர்; மற்றவர்போல் இதுபற்றி ஒரு நூலும் எழுதியுள்ளவர்! இருந்தால் என்ன? சிற்றத்தால், சிந்தனை சிதைந்துகிடக்கும்பொழுது, நாட்டு மக்களின் சீரிய வரலாறு கருத்துக்கும், கண்ணுக்கும் புலப்படும்? 'முட்டாள்தனம்'—'மடமை'—'அறியாமை' என்றெல்லாம் அர்ச்சித்தார்; வருகிற வடநாட்டு யாத்திரையினர் எதிர்பார்த்தபடி தட்சணை கொடுக்காவிட்டால். அர்ச்சகர் வாயில் வந்தபடி ஏசுவரே, அதுபோல!

இந்தியாவின் தலைமை அதிகாரி, நமது கோயில்களில் யந்திரம் என்று ஏதேதோ முணுமுணுத்துக் கிடக்கிறார்களே, அந்த அர்ச்சகர் நிலைக்கு, தம்மைத் தாழ்த்திக் கொண்டார்! வருந்தத்தக்க செய்தி!

'அடா' என்று ஒருமுறை கூறினாய் எம்மை நீ, 'அடா' 'அடா' என்று எத்தனை முறை உம்மை அழைத்தேன் பார், என்று வழங்கும் கற்பனை உரைபோல, மூன்று முறை 'முட்டாள்' என்று அடுக்கிக் காட்டினார் பண்டித ஜவகர்!

ஆங்கில அகராதியில் உள்ள சுடு சொற்கள் அனைத்தையும், தான், நன்கு கற்றிருப்பதாக நாட்டு மக்களுக்குக் காட்டிச் சென்றிருக்கிறார். கனி இருக்கக் காய் கவரும் [illegible]!

ஜவகரின் சிறு சொல்லால்,—நமக்கு நஷ்டமில்லை— அவருடைய கண்ணியத்திற்குத்தான் சமாதி கட்டப்பட்டிருக்கிறது!

இதுகண்டு நாம் கோபிக்கத் தேவையில்லை!

'தொட்டுக்கொண்டு தின்பேன்!' என்றானே அந்தச் சிறுவன், அது கேட்டு, அறிவுரை கூறிய பெரியவர் கோபித்தா கொண்டார்? அதேபோல, நேரு, 'முட்டாள்' 'முட்டாள்' என்றுதான் கூறுவேன் என்று மார்தட்டி கர்ஜித்திருக்கிறார். சடைந்தெடுத்தவர்களின் அரவணைப்பில் இருப்பவர்கள் எவரும், இப்படித்தான் பேசுவார்கள்! தள்ளுங்கள், அப்புறம்!

சர்க்கார் ஊழியர்களுக்குக் கூ ...

காத்துக்கிடக்கும் புத்தாண்டு பரிசு!

சுமார் 4500 நபர்களுக்கு அப்பரிசு வழங்க பம்பாய் சர்க்கார் முடிவு

பம்பாய், அக். 21—

பம்பாய் மாநிலத்தில் 63 நகரங்களில் கொண்டுவர இருக்கிற, உணவுப் பங்கீடு ஒழிப்பின் விளைவாக, சிவில் சப்ளை இலாகாவைச் சேர்ந்த சுமார் 4,500 பணியாளர்களுக்கு வேலை போய்விடும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. கிறிஸ்துவப் புது ஆண்டில், அந்தப் பணியாளர்களுக்கு வேலையைவிட்டு விரட்டும் பரிசைத்தான் கொடுக்க பம்பாய் சர்க்கார் தயாராக இருக்கிறது.

எவரெஸ்ட் உச்சியில் ஸ்டாலின் சிலை!

ஜினிவா, அக். 21—

எவரெஸ்ட் உச்சியில் ஸ்டாலின் சிலையையும், லெனின் சிலையையும் அடுத்த ஆண்டில் நிறுவ ரஷ்ய மலையேறும் நிபுணர்கள் முயற்சிக்கப் போகின்றனராம்!

திபேத் வழியாகவே இக்குழு மலையேறும் எனத் தெரிகிறது. சென்ற ஆண்டு இந்த வழியாக எவரெஸ்ட் ஏறிய ரஷ்யக் குழுவில், பல ரஷ்ய மலையேறும் நிபுணர்கள் மாண்டனர்.

ரஷ்யாவின் மிகவும் உயரமான மலையான மவுண்ட் லெனின்மீது இக்குழுவினர் லெனின் சிலையையும் உடன் எடுத்துச் சென்றே ஒத்திகையும் பார்த்தாகி விட்டதாம்! மலை ஏறுவதற்கான இரகசிய சாதனங்கள் சிலவற்றையும் இவர்கள் கண்டுபிடித்துள்ளார்களாம்.

இக்குழுவில் டென்ஸிங்போன்ற திறமைசாலி எவரும் இருப்பதாகத் தெரியவில்லை.

மாநில மாவட்ட மேலதிகாரிகள் மூவர் நியமனம்

இரண்டு வாரங்களில் வேலை தொடங்கும்

சென்னை, அக். 21—

மாவட்ட கலெக்டர்களுக்கு மேலதிகாரிகளாக மூன்று புதிய அதிகாரிகளை சென்னை சர்க்கார் நியமித்துள்ளனர். இந்த அதிகாரிகளின் சம்பளம் ரூ 3000. இவர்கள், பிரதேச கமிஷனர்கள் என்று அழைக்கப்படுவர்.

சென்னை மாநிலம் முழுவதற்கும் இந்த மூன்று கமிஷனர்களை சர்க்கார் நியமித்துள்ளனர். சென்னையில் ஒரு வரும், திருச்சி அல்லது, புதுக்கோட்டை, அல்லது மதுரையில் ஒருவரும், கோயமுத்தூர் அல்லது நீலகிரியில் மூன்றாவது அதிகாரி ஒருவரும் இருப்பர்.

இந்த கமிஷனர்களின் முக்கிய வேலை நிலவரி வசூலிப்பது, அவர் டிவிஷன்களை அபிவிருத்தி செய்வது ஆகியவைகள்தான்.

சென்னையிலுள்ளவருக்கு தென்னார்காடு, வடார்காடு, செங்கற்பட்டு, தஞ்சை, சேலம் ஆகிய மாவட்டங்களும், திருச்சி, அல்லது மதுரை அல்லது புதுக்கோட்டையில் இருப்பவருக்கு திருச்சி, மதுரை, ராமனாதபுரம் நெல்லை ஆகிய மாவட்டங்களும் கோவை அல்லது நீலகிரியிலிருப்பவருக்கு கோவை, நீலகிரி, மலபார், தென்கன்னடம் ஆகிய மாவட்டங்களும் ஒப்படைக்கப்படும். இன்னும் இரண்டு வாரங்களில் கமிஷனர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கூறப்படுகிறது.

சூயஸ் தகராறு

பிரிட்டன்—எகிப்து கருத்து வேற்றுமை வளர்கிறது

கெய்ரோ, அக். 21—

சூயஸ் கால்வாய் தகராறில், உடன்பாடு ஏற்படவில்லையென இன்று எகிப்து தெரிவித்தது.

சூயஸ் பிரச்சினையில் எகிப்தும்—பிரிட்டனும், உடன்பாடு காணத் தவறி விட்டதாக எகிப்தின் தேசிய விவகார அமைச்சர் மேஜர் சாலேம் அறிவித்தார்.

இரு தரப்பு தூதுக் குழுவினரும் இன்று நெடுநேரம் பேச்சு வார்த்தை நடத்தியதின் பின், மேற்கண்ட அறிக்கை வெளியிடப்பட்டது.

இதுதான் இறுதியான சந்திப்பாக இருக்கவேண்டுமென்றும் அந்த வட்டாரத்தில் பேசிக் கொள்ளப்படுகிறது.

இரு தரப்பினரும், தமது நிலையை விட்டுக்கொடுக்க மறுத்ததின் விளைவாகத்தான் ஒருமுகமான உடன்பாடு ஏற்படவில்லையென இரு தரப்பாரும் ஒப்புக் கொள்கின்றனர்.

பிரிட்டிஷ் தொழில் நுணுக்க நிபுணர்கள், இராணுவ உடை தரிக்கவேண்டுமென்று பிரிட்டன் வற்புறுத்தியது; ஆனால், எகிப்து சிவிலியன் உடைதான் உடுக்க வேண்டுமென்று கூறியது.

காஷ்மீர் மாநாட்டின் பொதுச் செயலாளர்

பதவியிலிருந்து நீக்கப்பட்டார்

சிரிநகர், அக். 21—

காஷ்மீர் தேசிய மாநாட்டின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து மவுலானா சயித் மசூதி விலக்கப்பட்டார். தேசிய மாநாட்டின் பொதுக் கவுன்சில் மசூதியை பதவியிலிருந்து நீக்கி இன்று ஒரு தீர்மானம் நிறைவேறியது. அத்தீர்மானத்தில், காஷ்மீர் மந்திரி சபையில் நெருக்கடி ஏற்பட்டதிலிருந்து மசூதி கொள்கைக்கு முரணாக நடந்து கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆடு நனைகிறது என்று ஓநாய் குந்தி அழுகிறது!

பழி சுமத்தி, பலி கேட்கும் நரிக்குளிப் பாட்டிகள்!

மலத்திலே புழுத்த புழுக்களின் நல்லியல்பு போதனை!

பொதுமக்களை விரும்பத்தகாதன செய்யத் தூண்டும் விஷமப் புத்தி!

அவருடைய அகராதியிலேயே இல்லாத, 'கண்ணியம்—அநாகரிகம்' என்ற வார்த்தைகளில் வம்பளிப்பு

—— (o) ——

நட்பு முறையுமல்ல! நேசப் பண்புமல்ல! ஏமாற்றத்தால் ஏற்பட்ட அழுக்காறு-அவா-வெகுளியின் விபரீதவிளைவு!

மார்க்சிய நடைமுறைக்கே மாசு கற்பிக்கும் மகா மேதைகள்!

From
இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மதுரை நகர் கமிட்டி,
29—A, கிளாஸ்காரத் தெரு, மதுரை.

★

To
மதுரை நகர் தி. மு. கழக
செயலாளர் அவர்கள் மதுரை.

13—10—53-ந் தேதி மாலை, ராஜாஜி விளையாட்டு மைதானத்தில் நடந்த கம்யூனிஸ்டு கட்சிக் கூட்டத்தில், கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதன் நகல் ஒன்றை தங்களுக்கு அனுப்பியுள்ளோம்:—

மதுரை நகரில், சமீபத்தில் இளைஞர் காங்கிரஸ் ஊழியர்களுக்கும், தி. மு. கழக ஊழியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட சச்சரவினால், இரண்டு பக்கத்திலுமுள்ள சாதாரண ஊழியர்கள் தாக்கப்பட்டனர்; இதன் காரணமாக, படுகாயமுற்ற அனைவருக்கும் அனுதாபத்தையும், தோழர் கருப்பையா பாரதி மரணத்திற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. மேலும் இரு சாராரும், சமீபகாலமாகத் தொடர்ந்து, கையாண்டுவரும் தவறான போக்குகளே இக்கொலைக்கும் படுகாயங்களுக்கும் காரணமாகும் என்பதை, சுட்டிக்காட்ட விரும்புகிறது.

ஆகவே, அரசியல் கட்சிகள் என்ற ரீதியில், கண்ணியமான முறையில், ஒருவரை ஒருவர் விமர்சிக்க வேண்டுமேயல்லாது, தவறான முறையில வெறியூட்டும் பிரசங்கங்கள் செய்வதிலும், தாக்குதல் நடத்துவதிலும், இரு சார்பிலுமுள்ள சாதாரண ஊழியர்கள் பழிவாங்கப்படுவதோடு, மக்களின் அரசியல் வாழ்க்கைக்கு வெறுப்புணர்ச்சியூட்டும் என்பதையும், இருக்கும் பிரஜா உரிமைகளும் பறிமுதல் செய்யப்படுமென்பதையும் மிகக் கவலையுடன் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். ஆகவே, சம்பந்தப்பட்ட இருசாராரும், மேற்கண்ட செய்கைகளைக் கைவிட்டு, மக்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்துமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறது.

மேலும், மதுரை மக்கள், எந்தக் கட்சியும், இம்மாதிரி ஒருவரை ஒருவர் தாக்கும் செய்கையையும், வெறியூட்டும் மேடைப் பிரசங்கங்களையும் அனுமதிக்கக் கூடாதெனவும், கம்யூனிஸ்டு கட்சி, சகல மக்களையும் மிகவும் வினயபூர்வமாக கேட்டுக்கொள்கிறது.

உங்கள் உண்மையுள்ள,
(Sd.) A. B. பழனிசாமி
மதுரை: 15—10—53

ஒழுங்கு நடவடிக்கை

"சிலர் ஒழுங்கு மீறி நடந்திருப்பது உண்மையென்றால், இவர்களில் பெரியவர்களாக இருந்தபோதிலும், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்கக் கூடாது. ஒரு தனிப்பட்ட நபரின் நடவடிக்கை, கட்சி ஒழுக்கத்தைக் குலைக்கும் என்று தெரிந்தால், அவர் மீது நடவடிக்கை எடுக்கவும் தயங்கக் கூடாது."

—அலகாபாத் காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் நேரு.

இரண்டாவது......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வம்பு செய்தனர். : போலீஸ் நடவடிக்கையை எதிர்த்து நின்றனர்

இந்த 'புதிய பாசிஸ்ட்' கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக, ரோமில் பல பகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டபோது, இரு சாராருக்கும் கைகலப்பு ஏற்பட்டதாகவும், போலீஸ் குறுக்கீட்டினால் விபரீதம் நேராமல் தடுக்கப்பட்டதாகவும் செய்தி ஒன்று கூறுகிறது. சம்பவத்தைப் புகைப்படம் எடுக்க முயன்றவர்களின், புகைப்படக் கருவிகளை போலீஸ் கைப்பற்றிக் கொண்டது.

கிளர்ச்சிக்காரர்கள், 'டிட்டோவைத் தூக்கிலிடு!' 'டிரீஸ்டி இத்தாலிக்குச் சொந்தம்!' என்று ஒலிகளை எழுப்பினர்.

'ஓராயாண்டா' என்ற தலைப்பிட்ட அறிக்கைத் தாள்களை கிளர்ச்சிக்காரர்கள் விண்ணில் வீசி எறிந்து விநியோகித்தனர். 'ஓராபாண்டா' என்றால் 'இதுவரை பொறுத்தது போதும்' என்று பொருள் தருமாம். இந்த வாசகத்தை அடிக்கடி முசோலினி, தனது மாளிகை மாடியில் இருந்து இத்தாலிய மக்களுக்குக் கூறி வருவது வழக்கமாம்!

ஆச்சாரியார் சர்க்காரின் மகத்தான சாதனை!

சென்னை கடற்கரை ஓரங்களில் துப்பறியும் நாய்கள்

சென்னை, அக். 21—

இந்தியாவின் போலீஸ் வரலாற்றிலேயே, முதன்முதலாக, இன்றிரவு சென்னையில் ஒரு புது பரீட்சை ஆரம்பமாயிற்று.

சென்னை நகரத்தில், சில இடங்களில், இரவு நேரங்களில், போலீஸ் கான்ஸ்டேபிள்களுடன் சேர்ந்து சுற்ற போலீஸ் பயிற்சி பெற்ற நாய்களும்கூட அனுப்பப்படும். மெரீனா கடற்கரை, மற்றும் சில இடங்களில் எட்டு நாய்கள் போலீசாருடன் போகும். குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் இந்தத் துப்பறியும் நாய்கள் மிகவும் உதவியாய் இருக்கின்றன என்று போலீஸ் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இரவு நேரங்களில் இந்த நாய்களையும் ரோந்துக்கு அனுப்புவதால் குற்றங்களைத் தடுக்கப் பெரிதும் அனுகூலமாக இருக்கிறதாம்.

குற்றங்களைக் கண்டுபிடிக்க முதல் முதலாக சென்னையில் தான் நாய்கள் பயன்படுத்தப் படுகின்றன.

★

வெறிநாய்களின் தொல்லை

திருச்சூர், அக். 21—

திருச்சூரிலும் சுற்றுப் பகுதியிலும் வெறி நாய்கள் அட்டகாசம் செய்கின்றன; பல மனிதர்களையும், கால்நடைகளையும் அவைகள் கடித்தன; சிலர் உயிரிழந்ததாகக்கூட கூறப்படுகிறது.

வெறி நாய்களைக் கொல்வதற்காக நகரசபை ரூ. 800 ஒதுக்கியுள்ளது.

வெறிச் செயலுக்கு தகுந்த சன்மானம்!

தி.மு.கழக கூட்டத்தில் செருப்பை வீசிய காங்கிரஸ் இளைஞனுக்கு மூன்றுவாரக் கடுங்காவல்

சேலம், அக். 21—

இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த சுப்ரமணியம் என்பவருக்கு ஓமலூர் சப்-மாஜிஸ்திரேட் மூன்று வார கடுங்காவல் தண்டனை விதித்தார்.

சுப்ரமணியம் என்பவர் சமீபத்தில் மேட்டூரில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் செருப்பை வீசியதாக அவர்மீது வழக்கு தொடரப்பட்டது.

தேசத் தொண்டுக்கு பதவி!

சாந்திகார், அக். 20—

சுதந்திரத்திற்கு முன்பு தேசிய அல்லது சமூக சேவை செய்தவர்கள், சர்க்கார் சர்வீசில் சேர பஞ்சாப் சர்க்கார் சலுகை அளித்துள்ளது. தேசிய அல்லது சமூக சேவை செய்தவர்கள், 45 வயது வரை, சர்க்கார் சர்வீசுக்கு எடுத்துக் கொள்ளப்படலாமென்று வயது வரம்பைத் தளர்த்த சர்க்கார் எண்ணியுள்ளது.

1954 டிசம்பர் வரை இச் சலுகை வழங்கப்படும்.

நேரடியாக சர்க்கார் உத்தியோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறவர்களுக்குத் தான் இச்சலுகை.

ஒத்துழையாமை இயக்கம், பாபர் அகாலி இயக்கம், கிலாபத் இயக்கம் போன்றவைகளில் பங்கு கொண்டோருக்கும் இச் சலுகை உண்டாம்.

பாரதிதாசன் இளைஞர் கழகம்

18—10—53ல், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் தலைமையில் செயற்குழு கூடிற்று. பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

இமய மலைகளில் மற்றொரு மிக உயரமான சிகரத்தில் ஏறுவதற்கான முயற்சிகளை எவரெஸ்டு மீது வெற்றிகொண்ட குழுவினர் 1955ல் மேற்கொள்ளவிருக்கின்றனர். இதில், தென்சிங்கும் கலந்து கொள்வார்.

15 ஆண்டுகளில் இந்தியா வல்லரசுகளில் ஒன்றாகும்!

அந்தக் கால அளவில் வல்லரசுகள் என்ன ஆகும்?

கனவு உலகத்தில் கனம் பிரதமர்!

அலகாபாத், அக். 21—

"இன்னும் 15 ஆண்டுகளில், இந்தியா, பெரிய நாடுகளுக்குச் சமானமான அந்தஸ்திற்கு உயர்ந்து விடும் என்பதில சந்தேகமில்லை. இத்துறைக்கான நவ இந்தியாவிற்கு கடைக்கால் போட்டாகி விட்டது, கடந்த ஆறு ஆண்டுகளில், வளப்பத்திற்கான பாதையில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றத்தில் இந்தியா போய்க்கொண்டு இருக்கிறது."

காணும் காட்சி!

"இப்பொழுது மக்களுக்கு முன்னேற்றத்துக்கான வாய்ப்புகள் கிடைக்கப்பெறாததின் பலனாக, அவர்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் பின் தங்கிக் கிடக்கிறார்கள். கல்வி, மருத்துவம், அலுவல் ஆகியவைகளை மக்கள் பெற்றாக வேண்டும்."

"உழவர்களின் கீழான நிலையை உயர்த்த, நாட்டு முன்னேற்றத்திற்காக நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் உதவி செய்தாலன்றி, நமது உழைப்பு வீணே."

"நிலத்தில், தங்களுக்குரிய பங்கை ஒவ்வொரு உழவனும் பெற்றாக வேண்டும். கூடுமான வரை நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுக்கப்பட வேண்டும். வருமானம் கிடைக்கப் பெறாதவர்களுக்கு வேலைதர கிராமத் தொழில்களுக்கு ஊக்கமூட்ட வேண்டும்."

—அலகாபாத் அருகில் உள்ள கிராமத்தில், நேரு அவர்கள் பேசின ஒரு கூட்டத்தில் மேற்குறித்தவாறு குறிப்பிட்டார்.

ஏஜண்டுகள் தேவை

"நம் நாடு" விற்பனை செய்ய கீழ்க்கண்ட ஊர்களில் முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. விபரங்கட்கு எழுதவும்:

பாபநாசம்
புவனகிரி
பேராவூரணி
கொள்ளிடம்
மங்கலஹர்
பெரியகுளம்
குமாரபாளையம்
பவானி
ஸ்ரீவைகுண்டம்
மானாமதுரை
சங்கரன்கோவில்
சத்தியமங்கலம்
திருப்பத்தூர் (R. D.)
[illegible]

செய்திச் சுருள்

★

புதிய கல்வித் திட்ட எதிர்ப்புக் கூட்டம்

நீடாமங்கலம், அக். 20—

இலக்கிய நாடக மன்றத்தின் சார்பில், 18—10—53 மாலை யமுனா வித்வரத்தினம் மோகட்சிங் ஜீ. வி. பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர் யூ. என். சாமி புதிய கல்வித் திட்டத்தைக் கண்டித்தும், திரு. வி. க.வின் சேவைகளையும் விளக்கினார். தோழர் எஸ். எஸ். கிதானம் ஆச்சாரியார் ஆட்சியின் அலங்கோலத்தைக் கண்டித்துப் பேசினார். தலைவர் தன் முடிவுரையில், மக்கள் பசிக் கொடுமையால் மாண்டுகொண்டிருக்கும்போது, மூன்றரைலட்ச ரூபாய் செலவில் மகாத்மாவுக்கு மண்டபம் கட்டும் போக்கைக் கண்டித்தார். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சொற்பயிற்சிக் கூட்டம்

திருச்சி, அக். 21—

18—10—53-ல், தோழர் சு. அருணகிரி தலைமையில், 'பழமையும்—விஞ்ஞானமும்' எனும் பொருள் பற்றி, நான்காவது சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள்: பிச்சை ரத்தினம், எத்துராசு, தாணு கிருட்டினன், குப்புசாமி, பாலு, கி. வெங்கிடாசலம் ஆகிய தோழர்களும், மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்.

கரந்தை சொற்பயிற்சி மன்றம்

18—10—'53-ல், தோழர் அப்பாராசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், 'ஔவையார்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் இராதாகிருஷ்ணன், செங்கமலம், பாவாடை பாஸ்கரன், இராகவன், நம்பியார் டி. சி. கண்ணன் முதலியோர், 'ஔவையாரி'ன் உண்மை வரலாற்றை இலக்கியச் சான்றுகளுடனும் பட உலகில் மாறுபட்டுள்ளதையும் விளக்கிக் கூறினர். இறுதியில் மன்றச் செயற்குழுவிற்கு இராதாகிருட்டினன், முனியமுத்து ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

மாலையில், தோழர் இராகோடிலிங்கம் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், மன்றத்தின் பெயரை, "திரு வி. க. சொற்பொழிவு மன்றம்" என்று மாற்றியமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதுபோது தோழர்கள் பலர், பெயர் மாற்றத்திற்காக விளக்கவுரையாற்றினர்.

பிரிவு உபசாரம்

அகூர், அக். 20—

8—10—53ல், பாரதிதாசன் படிப்பக அங்கத்தினர்களில் ஒருவரான தோழர் அ. வே. கதிர்வேல் அவர்கள் ரயில்வே உத்தியோகம் ஏற்கப் போவதை முன்னிட்டு படிப்பக நிர்வாகத்தினர்கள் அவருக்குத் தேனீர் விருந்தளித்தனர். பின்னர் தோழர் பொ. ராசு அவர்கள் தலைமையில் பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றபோது, பிரிந்து செல்லும் தோழருக்கு படிப்பக முத்திரையிடப்பட்ட கைக்குட்டை ஒன்று அளிக்கப்பட்டது.

சிதம்பரம் வள்ளுவர் கழகம்

27—9—53ல், அங்காளம்மன் கோவில் தெரு, கெ. 27ல் வள்ளுவர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் கே. பி. சபாபதி செயலாளராகவும், சு. பழமலை துணைச் செயலாளராகவும், து. ரெங்கசாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதுபோது, அத்தாக்குடி வழக்கு நிதியை உடனடியாக அனுப்புமாறு பொருளாளரைக் கோரியும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கழகச் செய்திகள்

பாகூர் தி. மு. கழகத் துவக்கம்

28—5—53-ல், தோழர் சு. கோவிந்தசாமி தலைமையில், தி. மு. கழகம் துவக்கப்பட்டது. அதுபோது, தோழர்கள் ஈரோடு எஸ். அப்பாவு கொடியேற்றி வைத்தார்; இரா. பெருமாள், ஈ ஏ மதார்ஷா, கே. ஆறுமுகம், எம். சின்னப்பன் ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழக கொள்கைகள் பற்றியும், தற்கால நிலை பற்றியும் பேசினர். பின்னர், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள்: அ. கோவிந்தசாமி செயலாளராகவும், த சின்னுசாமி துணைச் செயலாளராகவும், கோவிந்தன் மாவட்ட பிரதிநிதியாகவும், எம். முத்துசாமி பொருளாளராகவும், மற்றும் பழனியப்பன், வேலப்பன், ரங்கசாமி, சின்னுசாமி, டைலர் தம்பி, சின்னப்பன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாச்சம்பாளையம் தி. மு. கழகத் துவக்கம்

கோவை மாவட்டம் மாச்சம்பாளையத்தில், தி. மு. கழகத் துவக்க விழா, தோழர் வீ. ராயப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் சு. ஆறுமுகம், கொடியேற்று விழா வாற்றினார். தோழர் சி. டி. தண்டபாணி கழகத்தைத் துவக்கி வைத்தார் தோழர்கள் வெற்றிவேல், தங்க மாணிக்கம் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

★

ஆதிரங்கம்

27—9—53-ல் கூடிய தி. மு. கழக செயற்குழுக் கூட்டத்தில், தோழர்கள் சி. எஸ். மூர்த்தி செயலாளராகவும், அ. பக்கீர் முகம்மது துணைச் செயலாளராகவும், கே. எ ஜப்பார் பொருளாளராகவும், வி. ஆர். எம். சுல்தான் மாவட்டப் பிரதிநிதியாகவும், மூ. அ. எ. சுல்தான் விளம்பர உறுப்பினராகவும், எம் இஸ்மாயில், கா. அமீர், பி. என். முகம்மது, வை. சுப்ரமண்யம், எம். அபுத்தாலிபு, மூ. அ. அஜீஸ், தம்புசாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

திரு. வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

மீஞ்சூர்

18—10—53ல், தோழர் நா. வெள்ளைசாமி அவர்கள் தலைமையில் கூடிய கமிட்டிக் கூட்டத்தில், தோழர்கள் கோ. பாலகிருட்டிணன் செயலாளராகவும், சி. பி எ. ரகிமான் துணைச் செயலாளராகவும், நா. வெள்ளைச்சாமி பொருளாளராகவும், தங்கசாமி, தருமராசன் மாவட்டப் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொன்மலைப்பட்டி

19—10—53ல், தி. மு. கழக கிளையின் செயற்குழுக்கூட்டம், தோழர் சி. எஸ் மணி தலைமையில் நடைபெற்றபோது, செயற்குழு உறுப்பினர் தோழர் வி. சின்னசாமி அகால மரணமடைந்ததற்கு அனுதாபம் தெரிவித்தும் மூன்றுமாத வரவு — செலவு கணக்கை அங்கீகரித்து, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செம்பியம் அறிவு வளர்ச்சி மன்றம்

சீர்திருத்தத்தையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றும் செம்பியம் அறிவு வளர்ச்சி மன்றத்தின் 18-10-53 கூட்டத்தில் தோழர்கள் விக்ரமன் செயலாளராகவும், ஓ ஆர் பாண்டியன் துணைச் செயலாளராகவும், மீ. இளமதி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இத்தாலியில் மக்கள் தொகை பெருக்கம்

குடியேற்ற நாடு தேவையாம்!

ரோம், அக். 20—

இத்தாலியில் திருப்திகரமான வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்துவதென்றால் அங்குள்ள நான்கு கோடி மக்களில் 40 லட்சம் பேர்களை, மக்கள் தொகை குறைந்துள்ள நாடுகளுக்கு அனுப்ப வேண்டுமென்று இத்தாலிய சர்க்கார் தீர்மானித்திருக்கிறது.

அதாவது, பத்தில் ஒருவரை வேறு நாடுகளுக்கு குடியேற்ற வேண்டுமென்று, ஐரோப்பிய குடியேற்ற சங்கத்திற்கு இத்தாலி விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வளவு பேர்களையும், ஒரேயடியாக குடியேறச் செய்ய முடியாதாம். இவ்வாண்டு அகதிகள் உள்பட, மொத்தம் 85,000 பேர்களையும், அடுத்த ஆண்டு 1,15,000 பேர்களையும், குடியேற்ற இச்சங்கம் திட்டமிட்டிருக்கிறது. சென்ற ஆண்டு பிப். 1-ந் தேதி முதல் இவ்வாண்டு கடைசி வரை 1,47,000 பேர்கள் குடிபெயர்ந்திருக்கின்றனர். இவர்களில் 40,000 பேர்களுக்கு மேல் யு. எஸ். ஸில் குடியேறினர். கனடா, ஆஸ்திரேலியா, பிரேஜில் ஆகிய நாடுகளும் புதிதாக குடியேறுபவர்களை ஏற்றுக் கொண்டன.

கைதிகள் நல்வழிபட நடவடிக்கை

அறநெறியில் ஒழுகப் பயிற்சி

லண்டன், அக். 20—

கைதிகளை சீர்திருத்தவும் உழைத்து யோக்யமாக வாழச் செய்யவும் பிரிட்டிஷ் சிறை அதிகாரிகள் புது முயற்சிகளை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

வாழ்க்கையிலேயே ஒருநாள் கூட யோக்யமான வேலையே செய்திராத 12 கைதிகள் பிரிஸ்டல் சிறையிலுள்ள கம்பியில்லா சிறைக்கு மாற்றப்படவிருக்கின்றனர். பொழுதுபோக்கு சாதனங்கள், லைப்ரெரி வசதிகள் இவை எல்லாம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பகல் வேலைகளில் அவர்கள் சாதாரணமானவர்களைப் போல, உடை உடுத்து தாங்கள் செய்யும் வேலைகளுக்கு சம்பளமும் பெறுவார்கள். இவர்கள் சிகரெட் மற்றும் இதர செலவு போக மீதமாக உள்ள தொகை அவர்கள் கணக்கில் டிபாசிட் செய்யப்படும்.

இவர்கள் யோக்கியமான வாழ்க்கையை இதுவரை நடத்தியதே இல்லை. ஆகவே, யோக்யமாக வாழ்க்கையை நடத்த இப்போது ஒரு வாய்ப்பு கொடுக்கப்படவிருக்கிறது.

விடுதலையடைந்த பின்பு இவர்கள் ஒழுங்கான வாழ்க்கையை நடத்தி நல்ல மக்களாக ஆக வழி செய்யவே இந்த ஏற்பாடுகள்.

மறைவு

பொள்ளாச்சி நகரப் பிரமுகரும், பல பொது ஸ்தாபனங்களில் பணியாற்றியவரும் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவருமான தோழர் பி. கே. கிருஷ்ணசாமி அவர்கள் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற 14—10—53 புதன்கிழமையன்று திடீரென தனது இல்லத்தில் காலமானார். பிரேத ஊர்வலம் தி மு. கழகக் கொடிகளுடன் புறப்பட்டது. ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். மயானத்தில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் பலர் பேசினர்.

'நம் நாடு' ஏஜெண்டு தோழர்கட்கு

★

'நம் நாடு' பில் பாக்கிகளை அனுப்பி வைக்காமலிருந்த ஏஜெண்டுத் தோழர்கட்கு: பல அறிவிப்புகட்குப் பிறகும், பாக்கி ரூபாய் வந்து சேராத காரணத்தினால், 'நம் நாடு' அனுப்புவதை நிறுத்தியுள்ளோம். இனி, வருத்தப்பட்டுக் கடிதம் எழுதினால் மட்டும் பயனில்லை; இம்மாத இறுதிக்குள், பில் பாக்கி ரூபாயை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்; இன்றேல், நவம்பர் மாதம் முதல், புது ஏஜெண்டுகள் நியமிக்கப்படுவர்; பழைய ஏஜெண்டுகளின் கணக்கை முடித்து, பாக்கியை வசூலிக்க, நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியமும் ஏற்படுமென்பதை வருத்தத்துடன் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றோம்,

• • •

'நம் நாடு' ஏஜெண்டுகள், பில் பாக்கித் தொகையை, ஒவ்வொரு மாதம் 10-ந் தேதிக்குள், கண்டிப்பாக, அவசியம் அனுப்பிவைக்க வேண்டுகிறோம். ஒரு மாத பில் பாக்கியை, 5-6 தடவைகளில் அனுப்பி வைத்துக் காலம் கடத்தக் கூடாது; இவைகளை 'நம் நாடு' ஏஜண்டுத் தோழர்கள் கருத்தில் வைக்க வேண்டுகிறோம்.

பொறுப்பாளர்: 'நம் நாடு',
இராயபுரம், சென்னை-13

22—10—53.

கல்லக்குடி போராட்ட நிதி

வி. எஸ். மணி அறிவிப்பு

முன் வரவு ரூ.	802—8—0
குன்னத்தூர் தி.மு.க	5—0—0
கே. சுந்தரம்	1—0—0
கே. முத்துசாமி	1—0—0
என். டி. ராமசாமி	1—0—0
கே. திருமூர்த்தி	1—0—0
கே. அய்யாவு	1—0—0
கே என். நடராசன்	1—0—0
ஏ. சம். தங்கவேலு	1—0—0
ஏ. சக்தீ	1—0—0
குழந்தைவேல், இச்சிப்பாளையம்	1—0—0
மணிவண்ணன்	1—0—0
சிங்கப்பூர் தோழர்கள்	
ஆர். குருசாமி	3—0—0
எஸ். விஜயகோபால்	1—8—0
வி. செம்புவீரப்பன்	3—0—0
கோபால்	1—8—0
வி. வேலு	1—8—0
தி. வெள்ளையன்	1—8—0
கெ. கோபால்	1—8—0
கெ. பொன்னையா	1—8—0
ஏ. சோலையப்பன்	1—8—0
சா. சோமையா	2—4—0
என். பாண்டியன்	1—8—0
பொன்னுதுரை	0-12—0
மலையாண்டி	0-12—0
வி. எம். ஓம்சக்திவேல்	1—8—0
என். கிருஷ்ணப்பா	1—8—0
எம் சின்னமுத்து	1—8—0
அ. சேது	1—8—0
எஸ். சடையன்	1—8—0
பெ. கண்ணுசாமி	1—8—0
என். வி. பாக்கியநாதன்	1—8—0
கெ. பாலுசாமி	1—8—0
ஜி. சாமிகண்ணு	1—8—0
எம். ஏ பெருமாள்	3—0—0
அ. முத்து	1—8—0
அ வி அய்யாசாமி	1—8—0
எம். பி. ராஜு	1—8—0
எம். ஏ புஷ்பலிங்கம்	1—8—0
ஏ. பஷீர்	1—8—0
கு கிருஷ்ணன்	1—8—0
எம். இராக்கன்	4—8—0
சு. கருப்பையா	1—8—0
மா. சோலையப்பன்	1—8—0
கா. ஆறுமுகம்	1—8—0
பொன்னுசாமி	1—8—0
ஆக மொத்தம் ரூ	875—4—0

திரு. வி. க மறைவு: கீழ்குப்பம் பஞ்சாயத்து அனுதாபம்

14—10—53ல், தோழர் எல். புருஷோத்தம் தலைமையில் நடைபெற்ற கீழ்குப்பம் பஞ்சாயத்து கூட்டத்தில், தி.வி.க. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், அவரின் நினைவாக ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

கலை இல்ல நூலக ஆண்டுவிழா

தரங்கம்பாடி, அக். 21—

தரங்கம்பாடி கலை இல்லத்தில் திரு. வி. க. மறைவு அனுதாபக் கூட்டத்தில், கலை இல்ல நூலக ஆண்டு விழாவை டிசம்பர் திங்கள் முதல் வாரத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

திரு. வி. க. நினைவு நிதி

சென்னைத் தமிழ்ச் சங்கம், திரு. வி. க. நினைவு நிதிக் குழுவினர் அறிவிப்பது: நினைவு நிதிக்காக இன்று வரை வரவு:—

முன் வரவு ரூ. 499—10—0; திருவள்ளுவர் தமிழ் மாணவர் கழகம், அரசர் கல்லூரி, திருவையாறு ரூ. 75; அழகப்பா கல்லூரி, காரைக்குடி ரூ. 301; இளைஞர் ஒற்றுமைக் கழகம், கோனாப்பட்டி ரூ 201; பம்பாய் தமிழ்ச் சங்கம், மாதுங்கா ரூ. 200; அம்பிகா ஸிகார் பேக்டரி, ஜஹோர் பஹ்ரு, மலேயா ரூ. 81; சிவவடிவேல், சிரம்பான், மலேயா ரூ 10; ஆர். சிவோஹம், நாகப்பையர் தெரு, சென்னை ரூ. 5; பி. என். பாலசுப்ரமணியம், அழகப்பா கல்லூரி ரூ. 5; சுப. அடைக்கலம், சிங்கப்பூர் ரூ 2; பெ. நடராசு, ஈப்போ, மலேயா 15 ஷில்லிங்; வே. க. சு. மணியம், பேராக், மலேயா 10 ஷில்லிங்; அ. கதிர்செல்வன், ஈப்போ 40 ஷில்லிங்.

ஆக மொத்தம்: 65 ஷில்லிங்கும், ரூ. 1379—10—0 ஆகும்

திருத்தம்

2—10—53ந் தேதிய 'நம் நாடு' இதழில், 3-ம் பக்கம் வெளியாகியுள்ள அத்தாக்குடி வழக்கு நிதிக் கணக்கில், "விருதுநகர் டி. ஏ. ஏசுதாஸ் 6—0—0 என்றிருப்பதை, "விருதுநகர் வி. வி. ஆர். படிப்பகம் 6—0—0" என்று திருத்திப் படித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

ஊர்ஜிதம்!

கெய்ரோ, அக். 20—

தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்ட மூன்று எகிப்தியர்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனை புரட்சிகரக் கௌன்சிலால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இவர்கள் உள்நாட்டு ரகசியங்களை அந்நியர்களுக்கு அறிவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது.

அதிசயம்—ஆனால் உண்மை!

லண்டன், அக். 20—

மனித ஹிருதயத்தை 4 மணி நேரம் நிறுத்திவைத்து, பின்பு ஓடச் செய்வதற்கான சாதனம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. இதனால், இனி பிழைப்பது துர்லபம் எனப்படும் நோயாளிகளைக்கூட பிழைக்கும்படி செய்ய முடியுமாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.